# 2 கடவுளை வணங்குவோம்

இறைவன் நமக்கு உள்ளேயும், புறத்தேயும் உள்ளவர் என்பதனால் கடவுள் என்று அழைக்கின்றோம். கடவுளை வழிபடுவதன் மூலம் நாம் பிறந்த பயனை அடைய முடியும் ஆனந்தமாகவும் வாழமுடியும். கடவுளை வழிபாடு செய்யும் இடங்களாக இல்லம், பாடசாலை, கோயில் என்பன அமைகின்றன.

## அ. வீட்டில் வழிபாடு

வீட்டில் இறைவழிபாடு சிறப்புப்பெறின் இன்பம் பெருகும்; இதனாலேயே வீடு கட்டும் காலத்தில் பூசையறை ஒன்றை அமைத்தோ, பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தோ கொள்வர். புது வீடு கட்டிக் குடிப்புகும் பொழுது ஆலயத்திலிருந்து இறைவன் திருவுருவப் படங்களைக் கொண்டு வந்து வீட்டில் பூசையறையில் வைக்கின்றார்கள். எக்காரியத்தைச் செய்யும்போதும் கடவுளை வழிபட்டுச் செய்தால் அவை சித்தியாகும். வீட்டை எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். வழிபாட்டில் இடத்தூய்மையும், உடற்தூய்மையும், மனத்தூய்மையும் பேணப்படுதல் அவசியம்.

காலையில் நித்திரை விட்டெழும்போது இறைவனை மனத்தில் நினைத்து வழிபாடு செய்து எழுதல் வேண்டும். தொடர்ந்து காலைக் கடன்களை முடித்து. நீராடி திருநீறு அணிந்து வழிபாட்டுக்கு நீரும் மலர்களும் எடுத்து வந்து சுவாமியறையில் விளக்கேற்றி மலர்சாத்தி பின் தூப, தீபம் காட்டிய பின்னர் தேவாரதிருவாசகங்களை ஓதி வழிபட வேண்டும்.

இயன்றவரை வீட்டில் உள்ள எல்லோரும் இணைந்து வழிபாடு செய்தல் உத்தமம். இறைவழிபாட்டின் பின்னரே தேநீர் அருந்துவது நல்லது. வழிபாட்டின் பின்னர் உணவுண்ணும் பழக்கத்தை கைக்கொள்வது நல்லது. நாம் உண்ணும் உணவுகள் எல்லாம் இயற்கை தந்த கொடையே ஆகும். இந்த உணவை இறைவனுக்கு நிவேதனமாக்கி, உணவைச் சுற்றி நீர்தெளித்து நன்றி கூறி உணவின் ஒரு பகுதியை வேறு உயிர்களுக்கு வழங்கி உண்ணுவது சிறந்தது.

காலையும் மாலையும் கடவுளை வணங்குதல் அவசியம். ''காலையும் மாலையும் கடவுளைத் தொழு என்பது மகா வாக்கியம்'' வீட்டில் உள்ள எல்லோரும் கை, கால், முகம் கழுவிச் சுத்தமாக்கி, திருநீறு அணிதல் வேண்டும். வீட்டில் உள்ள தாயோ அல்லது வேறு ஒருவரோ விளக்கேற்றல் வேண்டும். இவ்வேளை **''இல்லகவிளக்கது இருள் கெடுப்பது...''** எனும் தேவாரத்தைப் பாடி, இவ்வொளி தெய்வீக ஒளியாக வீட்டை ஒளிவீசச் செய்ய வேண்டும் எனக் கடவுளிடம் வேண்டிக் கொள்ள வேண்டும். தொடர்ந்து ஊது பத்திகொழுதல் தூபதீபம் காட்டி திருமுறைப்பாடல்கள், தோத்திரப் பாடல்கள் பாடி வழிபடல் வேண்டும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

மனிதனுடைய வாழ்வில் தியானம் இன்றியமையாதது. மனத்தை ஒருமுகப்படுத்தி ஆன்மா மேனிலை அடையத் தியான வழிபாடு உதவுகின்றது. நிலத்தில் ஓர் விரிப்பை விரித்து அதன்மேல் இருந்து, (இயலுமான வரை பத்மாசனத்தில் இருப்பது நன்றாகும்.) கடவுளின் உருவத்தையோ, குத்து விளக்கின் சுடரையோ கண்களால் நோக்கி நமசிவாய மந்திரத்தை மனதிலே தியானித்து தியானத்தைச் செய்ய வேண்டும்.

தியான வழிபாட்டைச் சரியாகக் கடைபிடிக்க யோகாசனம் பற்றி அறிந்திருப்பதும் பயிற்சி பெற்றிருப்பதும் அவசியமானதாகும். இந்த யோகாசனத்தில் இருக்கை முறைகள் மட்டுமன்றி பிராணாயாமம் எனும் சுவாசப் பயிற்சி, மனதை ஒரு முகப்படுத்தல் என்பன முக்கியத்துவமுடையன. யோக வழி மூலமே சித்தர்கள், ஞானிகள் நீண்ட ஆயுளையும், ஆரோக்கியமான வாழ்க்கையையும் ஆன்மீக நிறைவையும் பெற்றுக் கொண்டார்கள்.

விரத காலங்களிலும், பண்டிகை நாட்களிலும் வீடுவாசல்களைக் கழுவி, மெழுகிச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். இக்காலங்களில் வாசலில் மாவிலையைத் தொங்கவிட்டும் கோலம் இட்டும், இறைதிருவுருவங்களுக்கு மலர்மாலை சாத்தியும், பொங்கல், கடலை, பழம், பாக்கு, வெற்றிலை போன்றவற்றைப் படைத்தும் வழிபாடு செய்தல் வேண்டும். வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை வழிபாடு செய்வது சிறந்தது.

## ஆ. பாடசாலையில் குருபூசை


வித்தியாலயம் என்பது வித்தை கற்பிக்கப்படும் ஆலயம் ஆகும். மாணவர்களின் கல்வியறிவு விருத்தி பெறுவதற்கும் அவர்களின் பண்புகள் மேன்மையடையவும் இறையருள் மிக இன்றியமையாததாகும். எனவே நாள்தோறும் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து பஞ்சபுராணம் பாடி வழிபடல் வேண்டும். ஆசிரியரின் வழிகாட்டலுடன் சைவசமய நற்சிந்தனை வழங்குவது சிறந்தது.

குரு என்ற சொல் குற்றத்தை நீக்குபவர் எனப்பொருள்படும். ஆசிரியர், ஆசான், சமய தீட்சை வழங்குபவர் போன்றோரையும் குரு என அழைக்கும் மரபு காணப்படுகின்றது. ஆன்மீக வேட்கையை அல்லது ஞானத்தை வழங்கும் தேசிகரை **ஞான குரு** என அழைப்பர். ஞானகுருவை தத்துவ நூல்கள் அருளுரு எனச் சிறப்பிக்கும். சைவசமய வளர்ச்சிக்கு அரும் பணி புரிந்த பெரியோர்களில் குரு என்னும் தகுதி வாய்ந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் சமயகுரவர் என அழைக்கப்படுவர். இதேபோல் சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களை அருளிச் செய்த மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார் ஆகியோரைச் சந்தான குரவர் எனவும் அழைப்பர். இவர்களைப் போற்றி செய்யும் பூசை குரு பூசையாகும். சைவ சித்தாந்த சாஸ்திர நூல்கள், திருமந்திரம் போன்றன



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

குருவை வழிபட்டு அருள் பெறலாம் எனக் கூறுகிறது. அந்த வகையிலேயே குருபூசைகள் செய்யப்பட்டு குருவைப் போற்றி வழிபட்டு வருகின்றோம்.



மேலும் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கு குருபூசை செய்யும் மரபும் சில இடங்களில் காணப் படுகின்றது. அதேபோல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சுவாமி விவேகானந்தர் போன்றோருக்கும் கடையிற்சுவாமிகள் போன்ற சித்தர்களுக்கும் பக்தர்கள் குரு பூசை செய்து வழிபட்டு வருகின்றார்கள்.

## குரு பூசையின் நோக்கங்கள்

- குருவின் எண்ணம், சொல், செயல் என்பவற்றின் பெருமையை அவரின் முத்தி நிலைக்குப் பின்னர் வாழ்கின்றவர்கள் புரிந்துக் கொள்ளச் செய்தல்.
- குருவைப்பற்றி அறிந்தவர்கள் அதனை ஏனையோருக்கு விளக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்.
- குருபக்தி, தெய்வபக்தி, சமய நம்பிக்கை என்பவற்றை மக்களிடையே பரப்புதல்.
- சைவசமய பண்பாட்டைப் பேணி எதிர்கால சமுதாயத்திற்கு அதனைக் கையளித்தல்.
- குருவைப் போற்றும் மனப்பான்மையைக் கட்டியெழுப்புதல்.
- குருபூசைக்குரிய சமயப் பெரியார்களின் பாடல்களைப் பாடும் திறமையையும் உபதேசங்களை விளக்கும் திறமையையும் பெறல்.

சைவ மன்றம், இந்து மன்றம் போன்ற மன்றங்கள் பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் குருபூசைகள் செய்வதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும். குறிப்பிட்ட வகுப்பு மாணவர்கள் குருபூசையைப் பொறுப்பேற்றுச் செய்யும் போது மாணவர்களின் பேச்சுக்கள், ஆசிரியரின் சொற்பொழிவு, சைவசமயப் பெரியார் ஒருவரின் பிரசங்கம், நடனம், நாடகம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும். இதன் மூலம் ஒற்றுமை, சமூக உறவு, வேலைகளைப் பகிர்ந்து கொள்ளல்,



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

தலைமை தாங்கும் பண்பு, தமது கலையுணர்வுகளை வெளிக்காட்டுதல், பக்தியுணர்வு என்பன ஏற்படுவதோடு, அந்தக் குரவர் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

## இ. இஷ்ட தெய்வ வழிபாடு

இறைவன் எங்கிருந்தாலும், அங்கெல்லாம் பாலில் நெய் போன்று உள்ளான். ஆனால் ஆலயங்களில் தயிரில் நெய்போன்று உள்ளான். தயிரைக் கடையும்போது நெய்பெறப்படுவதுபோல கோயில் வழிபாட்டின் மூலம் இறையருளைப் பெற்றுக் கொள்வது இலகுவானதாகும். எனவேதான் **''திருக்கோயில் இல்லாத திருவிலூரும் ''** என்று நாவுக்கரசரும் **''கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்''** என்று ஒளவையார் கூறிய முதுமொழியும் கோயில் இல்லாத ஊர் சிறப்புடையதன்று என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

ஒவ்வொருவரும் தாம் தாம் பிறந்த பிரதேசத்தில் சிறுபிராயம் முதல் வழிபடும் தெய்வம் இஷ்ட தெய்வமாகும். இஷ்டம் என்றால் விருப்பம் அல்லது தனக்குகந்த, தனக்கு விருப்பமானது எனப் பொருள்படும். சிறுவர்கள் வளர்ந்து வரும் காலத்தில் அவர்களுடைய மனதில் ஆழப்பதிந்து அவர்களின் வழிபாட்டினால், பக்தியினால் வேண்டுதலினால் வரங்கள் கொடுத்த தெய்வம் அவர்களின் விருப்பமான தெய்வமாகின்றது.

இவ்விஷ்டதெய்வமானது, பிள்ளையாராகவோ, முருகனாகவோ, சிவனாகவோ, அம்பிகையாகவோ, துர்க்கையாகவோ, இலக்குமியாகவோ, சரஸ்வதியாகவோ, முத்துமாரியாகவோ, பத்திர காளியாகவோ, பெரிய தம்பிரானாகவோ, வைரவராகவோ, கண்ணகியாகவோ அமையலாம். ஒவ்வொருவருக்கும் இஷ்டதெய்வம் வேறுபடும்.

இஷ்ட தெய்வ வழிபாட்டில் தொண்டும் முக்கியமானதாகும். வாரத்தில் ஒரு நாள் இஷ்ட தெய்வ ஆலயத்திற்குச் சென்று, குப்பை கூளங்களைக் கூட்டிக் கழுவித்துப்பரவு செய்வதும், மெழுக வேண்டிய இடத்தை மெழுகுவதும், பூமரங்களை நாட்டுவதும், மரங்களுக்கு நீருற்றுவதும், பூசைக்குரிய மணி, தீபம் முதலிய உபகரணங்களை சுத்தப்படுத்திக் கொடுப்பதும் பக்தர்களின் முக்கியத் தொண்டாகும்.

மேலும் வெள்ளி, செவ்வாய் போன்ற தினங்களில் இஷ்ட தெய்வக் கோயிலுக்குச் செல்வதும், பூசைக்குத் தேவையான மலர்கள், மலர் மாலைகள், ஊதுபத்தி, கற்பூரம், இளநீர், பால், நெய் போன்றவற்றைக் கொண்டு சென்று வழங்குவதும் உரிய முறைப்படி ஆலய வழிபாடு செய்வதும் முக்கிய கடமையாகும். பூசை நடைபெறும் வேளையில் மணி, சேமக்கலம் அடித்தல், சங்கு ஊதுதல் போன்றவை பக்தர்களின் கடமைகளாகும்.

எட்டாந்தரத்தில் ஆலயத்தில் செய்யத்தக்க காரியங்களைப் பக்தியோடு செய்வதையும் செய்யத் தகாத காரியங்களைத் தவிர்ப்பதையும் கற்றுள்ளீர்கள். அவற்றை இங்கு நினைவு கூர்ந்து ஆலயத்தில் ஒருவர்பின் ஒருவராக நின்றோ, இருந்தோ ஒழுங்கு முறையாக வழிபடுவதும் அமைதியாக இருந்து கிரியைகளைத் தரிசித்தலும் வேண்டும். கோயிலில் பூசைகள் நடைபெறும் நேரத்திற்கு வருகை தருவதும் பூசைகள் நிறைவடைந்ததும் உரிய நேரத்திற்கு வீடு திரும்புவதும் பழக்கமாகக் கொள்ள வேண்டும்.

## 🕮 பாடச் சுருக்கம்

- கடவுளை பக்தியோடு வழிபடுவதும் நம் கடமையாகும்.
- கடவுளை வீடு, பாடசாலை, ஆலயம் என்பவற்றில் வழிபடலாம்.
- வீட்டில் பூசையறை ஒன்றும், அங்கு சுவாமிப்படங்களும் இருத்தல் வேண்டும்.
- வீட்டில் காலை, மாலை வழிபாடும், விசேட தினவழிபாடும் முக்கியமானதாகும்.
- இறைவழிபாட்டோடு எந்தக் காரியத்தை தொடங்கினாலும், அவை வெற்றியாய் நிறைவு பெறும்.
- பாடசாலைகள் காலையில் இறை பிரார்த்தனையோடு ஆரம்பித்தல் வேண்டும்.
- பாடசாலையில் குருபூசைகளை மாணவர் பொறுப்பேற்றுச் செய்தல் வேண்டும். அதனால் தேர்ச்சிகள் பெறுவதோடு இறையருளும் கிட்டும்.
- குல தெய்வ வழிபாடு இன்றியமையாதது. குலதெய்வ ஆலயங்களில் தொண்டுகள் செய்வதும், கூட்டுப்பிரார்த்தனைகள், நற்சிந்தனைகள் செய்வதும் எமது கடமையாகும்.

## ✍ பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நீங்கள் வீட்டில் காலையில் செய்யும் வழிபாட்டுச் செயல்களை ஒழுங்காக எழுதுக.
2. உமது பாடசாலையில் நடைபெறும் குருபூசைகளை எழுதுக.
3. இஷ்டதெய்வ ஆலயத்தில் நீங்கள் செய்ய வேண்டிய தொண்டுகளை எழுதுக.
4. இஷ்ட தெய்வ ஆலயத்தில் அமைதியையும் ஒழுங்கு முறையையும் பேண எவற்றைச் செய்ய வேண்டும்.
5. உமது பிரதேசத்தில் இஷ்ட தெய்வ வழிபாடு பற்றி இருக்கும் நம்பிக்கைகளைச் சுருக்கமாகக் கூறுக.

## ௐ செயற்பாடு

- ஆசிரியரின் உதவியோடு ஒரு குருபூசையைப் பொறுப்பேற்று ஒழுங்குபடுத்தி, சிறப்பாக நடாத்தி முடித்து, அறிக்கை சமர்ப்பிக்குக.
- ‘‘வீட்டில் வழிபாடு’’ பற்றி ஐந்து நிமிடமளவில் பேச்சு ஒன்று நிகழ்த்துக.
- ஆலயத்தில் செய்யத்தகாதவை, செய்யத்தக்கவை என்பவைகளைத் தனித்தனியே சுவர்பத்திரிகையாகத் தயாரித்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- அமைதியும் ஒழுங்குமுறையும் பேணும் செயற்பாடுகளை பட்டியல்படுத்துக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக